# FIRST INFORMATION REPORT

**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

## முதல் தகவல் அறிக்கை

(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8102035

1. District : மாவட்டம் விருதுநகர் PS: காவல்நிலையம் ஊதக பிரிவு Year: ஆண்டு 2017 FIR No.: மு.த.அ. எண் 10/2017 Date: நாள் 30.12.2017

2. (i) Act சட்டம்: ஊழல் தடுப்பு சட்டம் 1988 Sections பிரிவுகள்: 13(2) r/w 13(1)(d)
   (ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
   (iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் 29.12.2017 Date from : நாள் முதல் 15.30 மணி முதல் Date to : நாள் வரை 18.30 மணி வரை
   Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் Time to : நேரம் வரை
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 30.12.2017 Time : நேரம்
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 30.12.2017 Time : நேரம்

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக ✓

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் 60 கி.மீ. தென் மேற்கு
   Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி உதவி ஆணையர்-I & II வணிகவரி அலுவலகம். இராஜபாளையம்
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் திரு. லட்சுமணன் (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர்
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு (d) Nationality : நாட்டினம் (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation : தொழில் (g) Address : முகவரி [illegible] ஆய்வுக்குழு அலுவலர் இராமநாதபுரம்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
   1. திரு. செந்தில். A1/17. த.பெ. K. சண்முகம், வணிகவரி அலுவலர்-II உதவி ஆணையர்-II [வணிகவரி] அலுவலகம். இராஜபாளையம்.
   2. திரு. செந்தில்வேலன். A2/17 த.பெ. பாலசுப்பிரமணியன், ஓய்வு பெற்ற பணியாளர் உதவி ஆணையர்-I வணிகவரி அலுவலகம் இராஜபாளையம்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant. குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
   [illegible]

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது:

இன்று 30.12.2017ம் தேதி மாலை சுமார் 6.00 மணிக்கு காவல் ஆய்வாளர், உளவுப்பிரிவு மற்றும் கண்காணிப்பு பிரிவு, விருதுநகர் R. முருகேசன் ஆகிய நான் அலுவலக பணியில் இருக்கும் போது இணை ஆய்வுக்குழு அலுவலர் திரு. லட்சுமணன் அவர்கள் கையொப்பத்தில் [illegible] 30 புகார் மனுடன் விருதுநகர் மாவட்டம், இராஜபாளையம், உதவி இயக்குநர்-II உள்ளாட்சி அலுவலகத்தில் வைத்து புகார் செய்த [illegible] இணை ஆய்வு செயல்முறை ஆணை நாள் 29.12.2017ம்

[தனித்தாள் இணைக்கப்பட்டுள்ளது]

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் R. விஜயகுமார் பதவி ஆய்வாளர் நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ................................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

[signature] 30.12.17

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer-in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்
[signature] 30/12/17

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
30.12.2017 at 2300 hrs

Name: பெயர் R. முருகேசன்
Rank: நிலை ......................No. எண் ..........
காவல் ஆய்வாளர்
உளவுப் பிரிவு, விருதுநகர்.

இணைத்து நடவடிக்கை எடுக்க வேண்டி கொடுத்தார். அந்த மனு விபரம் பின்வருமாறு: அனுப்புநர், திரு.லட்சுமணன், துணை ஆய்வுக்குழு அலுவலர், இராமநாதபுரம். பெறுநர், காவல் ஆய்வாளர், ஊழல்தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, விருதுநகர். அய்யா, பொருள்: விருதுநகர் மாவட்டம், வணிகவரித்துறை அலுவலக வளாகம், உதவி ஆணையர்-I (கீழ் தளம்) உதவி ஆணையர்-II (மேல் தளம்) இராஜபாளையம் ஆகியவற்றில் திடீர் இணை ஆய்வு செய்து கணக்கில் காட்டப்படாத பணம் கைப்பற்றியது தொடர்பாக. நான் நேற்று 29.12.2017ம் தேதி காலை 10.00 மணிக்கு இராமநாதபுரம் மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகத்தில் பணியில் இருந்தபோது, விருதுநகர் மாவட்டம், இராஜபாளையம் வணிகவரித்துறை அலுவலக உதவி ஆணையர்-I மற்றும் உதவி ஆணையர்-II ஆகிய அலுவலகங்களில் வணிகர்களிடமிருந்து லஞ்சமாக பணம் வசூலிப்பதாக கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில், விருதுநகர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலக வேண்டுகோளின்படி நான் விருதுநகர் மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு அலுவலகத்திற்கு வந்து, விபரத்தை கேட்டுத் தெரிந்துகொண்டு ஊ.த.க.பிரிவு காவல் ஆய்வாளர் திரு.பூமிநாதன் அவர்களுடன் மேற்படி அலுவலகத்தை ஆய்வு செய்ய இரண்டு அரசு சாட்சிகளான 1)திரு.முனீஸ்வரன் (37/17), வருவாய் உதவியாளர், விருதுநகர் நகராட்சி, விருதுநகர் மற்றும் 2)திரு.மதியசேகரன் (51/17), கண்காணிப்பாளர், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகம், மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம், விருதுநகர் ஆகியோர்கள் மற்றும் காவல் ஆளிநர்களுடன் 29.12.2017ஆம் தேதி மதியம் 2.30 மணிக்கு புறப்பட்டுச்சென்று விருதுநகர் மாவட்டம், இராஜபாளையம் வணிகவரித்துறை அலுவலக உதவி ஆணையர்-I மற்றும் உதவி ஆணையர்-II ஆகிய அலுவலகங்களில் 29.12.2017ஆம் தேதி பிற்பகல் 3.30 மணிமுதல் மாலை 6.30 மணி வரை திடீர் இணை ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. அப்போது வணிகவரித்துறை அலுவலக உதவி ஆணையர்-I மற்றும் உதவி ஆணையர்-II ஆகிய அலுவலகங்களில் பணிபுரியும் அலுவலர்கள் 1)துப்புரவு பணியாளர் திரு.செந்தில்நாதன் என்பவரின் அருகிலிருந்து சந்தேகப்படத்தக்க வகையில் கிடந்த வர் அந்த பணத்திற்கு சரியான விளக்கம் அளிக்காததால் கைப்பற்றப்பட்ட பணம் ரூ.11,000/-மும், 2)வணிக வரி அலுவலரான திரு.முருகன் அவர்களிடமிருந்து கணக்கில் வராத பணம் ரூ.5,500/-மும், 3)தனிநபரான திரு.ஆனந்தமுருகன் என்பவரிடமிருந்து வணிகவரி அலுவலர் திரு.முருகன் அவர்களுக்கு கொடுக்க கொண்டுவந்திருந்த பணம் ரூ.9000/- ஆக மொத்தம் கணக்கில் காட்டப்படாத பணம் ரூபாய் 25,500/- கைப்பற்றப்பட்டது. மேலும் மேற்படி

திடீர் இணை ஆய்வு சோதனையின்போது கைப்பற்றப்பட்ட மேற்சொன்ன தொகை ரூ.25,500/-ல் ரூ.11,000/- துப்புரவு பணியாளர் திரு.செந்தில்நாதன் என்பவர், வணிகர்களிடமிருந்து லஞ்சமாக பெற்ற பணமாக இருக்கலாம் என்றும், மேலும் ரூ.5,500/- வணிக வரி அலுவலரான திரு.முருகன் வணிகர்களிடமிருந்து லஞ்சமாக பெற்ற பணமாக இருக்கலாம் என்றும், மேலும் தனிநபர் திரு.ஆனந்தமுருகன் வைத்திருந்த ரூ.9000/- வணிக வரி அலுவலரான திரு.முருகன் அவர்களுக்கு லஞ்சமாக கொடுக்க கொண்டுவந்திருந்த பணம் என்று கூறியதாலும், மேலும் அந்த தொகைகள் லஞ்சப்பணமாக இருக்கலாம் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் கைப்பற்றப்பட்டது. இதுதொடர்பாக எனது செயல்முறை நடவடிக்கைகள் நேற்று 29.12.2017ஆம் தேதி மதியம் 3.30 மணிக்கு ஆரம்பித்து மாலை 6.30 மணிக்கு முடிக்கப்பட்டது. அந்த திடீர் இணை ஆய்வு செயல் முறை ஆணை, 1.ஆய்வு செய்த அலுவலகம்: வணிகவரித்துறை அலுவலக வளாகம், உதவி ஆணையர்-I (கீழ் தளம்), உதவி ஆணையர்-II (மேல் தளம்), இராஜபாளையம், 2.ஆய்வு ஆரம்பிக்கப்பட்ட நாள் மற்றும் நேரம்: 29.12.2017 ஆம் தேதி மதியம் சுமார் 3.30 மணி, 3. ஆய்விற்கு தலைமை ஏற்ற அலுவலர் : திரு.லட்சுமணன் (47/17) துணை ஆய்வுக்குழு அலுவலர், இராமநாதபுரம், 4. ஆய்வின்போது ஆஜரில் இருந்த அலுவலர்கள்: 1)திரு.பூமிநாதன், காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, விருதுநகர், 2)திரு.முனீஸ்வரன் (37/17), வருவாய் உதவியாளர், விருதுநகர் நகராட்சி, விருதுநகர், 3)திரு.மதியசேகரன் (51/17), கண்காணிப்பாளர், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகம், மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம், விருதுநகர், 5.ஆய்வு செய்யப்பட்டபோது அலுவலகத்திலிருந்த அரசு அலுவலர்கள்: வணிகவரித்துறை அலுவலக வளாகம், உதவி ஆணையர்-I (கீழ் தளம்)ல் பணியில் இருந்தவர்கள், 1)திருமதி.S.ரோசிலின்சுந்தரி (54/17), க/பெ.எம்.பழனிமாணிக்கம், உதவி ஆணையர், வணிகவரித்துறை-I, இராஜபாளயம். 2)திரு.S.கோவிந்தராஜன் (42/17),த/பெ.சொரிமுத்து, உதவி வணிகவரித்துறை அலுவலர், வணிகவரித்துறை-I, இராஜபாளயம், 3)திரு.S.சமுத்திரராஜன் (58/17), த/பெ.சண்முகவேல், கண்காணிப்பாளர், வணிகவரித்துறை-I, இராஜபாளையம், 4)திருமதி.ரேவதி, அ4 உதவியாளர், வணிகவரித்துறை-I, இராஜபாளையம், 5)செல்வி.லாவண்யா அருண் (25/17), த/பெ.சுப்புராம், உதவி ஆணையர் பயிற்சி, வணிகவரித்துறை-I, இராஜபாளையம், 6)திரு.K.அழகர்சாமி (53/17), த/பெ.கருப்பையா, அ1 உதவியாளர், வணிகவரித்துறை-I, இராஜபாளையம், 7)திருமதி.புஷ்பரதி (35/17), க/பெ.ரமேஷ், அ2 உதவியாளர், வணிகவரித்துறை-I, இராஜபாளையம், 8) திரு.இராஜகுரு (53/17), த/பெ.குருசாமி, அ3 இளநிலை உதவியாளர், வணிகவரித்துறை-I, இராஜபாளையம், 9)திரு.லதா

(53/17), க/பெ.செல்வராஜ், பி3 இளநிலை உதவியாளர், வணிகவரித்துறை-I, இராஜபாளையம், 10)திரு.முத்துக்குமார் (41/17), த/பெ.தர்மர், அ2 உதவியாளர், வணிகவரித்துறை-II, இராஜபாளையம், 11)திரு.செந்தில்நாதன் (42/17), த/பெ.பாலசுப்பிரமணியன், துப்புரவு பணியாளர், வணிகவரித்துறை-II, இராஜபாளையம், வணிகவரித்துறை அலுவலக வளாகம், உதவி ஆணையர்-II (மேல் தளம்)ல் பணியில் இருந்தவர்கள் 12) திரு.ஜெயராஜ் (46/17), உதவி ஆணையர்-II, 13) திரு.முருகன் (47/17) வணிக வரி அலுவலர்-II,14)திரு.முத்துமாரி (36/17) அ4 உதவியாளர், வணிக வரி துறை-II, 15)திரு.சண்முகசுந்தரம் (52/17) அ3 உதவியாளர், வணிக வரி துறை-II, 16)திரு.பாலையா (53/17) இளநிலை உதவியாளர் வணிக வரி துறை-II, 17)திரு.விஜயக்குமார் (42/17) துப்புரவு பணியாளர், வணிக வரி துறை-II தனி நபர்:- 18)திரு.ஆனந்தமுருகன் (39/17) த/பெ.பொன்னுக்காளை, அமைச்சியார்புரம் தெரு, சத்திரப்பட்டி (குரு யோகராஜ் டெக்ஸ்டைல்ஸ் உரிமையாளர்) கிடைக்கப்பெற்ற நம்பகமான தகவலின் அடிப்படையில் சம்பந்தப்பட்ட மேல் அதிகாரி அவர்களின் அனுமதியின்பேரிலும், உயர் அதிகாரிகளின் உத்தரவுப்படியும் இன்று 29.12.2017ஆம் தேதி மதியம் சுமார் 3.30 மணிக்கு காலம் 3 மற்றும் 4 கண்ட அலுவலர்கள் சகிதம் இராஜபாளையம் வணிகவரி உதவி ஆணையர் அலுவலகம்-I மற்றும் IIல் திடீர் இணை ஆய்வு நடத்தப்பட்டது. மேற்படி அலுவலகமானது இராஜபாளையம் டி.பி.மில்ஸ் சாலையில் கிழக்கு நோக்கி அமைந்துள்ளது. மேற்படி அலுவலகங்களானது தரைத்தளம் வணிகவரித்துறை உதவி ஆணையர்-I ஆகவும் மற்றும் முதல்தளம் வணிகவரித்துறை உதவி ஆணையர்-II ஆகவும் செயல்பட்டு வருகின்றது. தரைத்தளத்தில் வணிகவரி உதவி ஆணையர்-I அலுவலகத்தின் உள்ளே நுழைந்தவுடன் வலதுபக்கம் மேற்கு பார்த்து ஒன்றன்பின் ஒன்றாக மூன்று இருக்கைகளும், இடதுபக்கம் வணிகவரி அலுவலர் அறையும், இடதுபக்கம் வடக்குபார்த்து வணிகவரி அதற்குமேல்பக்கம் கிழக்கு பார்த்து துணை வணிகவரி அலுவலர் அறையும் அந்த அறைக்கு வெளியே கிழக்குபார்த்து கண்காணிப்பாளர் இருக்கையும், அதன் அருகில் இடதுபக்கம் உதவி ஆணையர், வணிகவரி (பயிற்சி) அவர்களின் இருக்கையும், அதற்கு அருகில் அ4 உதவியாளர் இருக்கையும், அதற்கு எதிர்பக்கம் மேற்குப்பார்த்து ஒன்றன்பின் ஒன்றாக மூன்று இருக்கைகளும், அந்த மூன்று இருக்கைகளுக்கு வலதுபக்கம் மேற்குபார்த்து, அதாவது உதவி ஆணையர்-I அவர்களின் அறைக்கு வெளியேயும் ஒரு இருக்கையும் அமைந்திருந்தது. அதேபோல் முதல்தளத்தில் வணிகவரி உதவி ஆணையர்-II அலுவலகத்திற்கு மேலே செல்லும் படிக்கட்டில் ஏறியவுடன் வலது பக்கம் வடக்குபார்த்த வாயில் உள்ள அலுவலகத்திற்கு உள்ளே நுழைந்தவுடன் வடக்கு பார்த்து ஒரு இருக்கையும், அந்த இருக்கைக்கு அருகில் வடக்கு பார்த்த

வாயிலுடன் கூடிய உதவி ஆணையர்-IIன் அறையும், அந்த அறைக்கு நேர் எதிரில் மேற்கு பார்த்த இருக்கைகள் ஒன்றன்பின் ஒன்றாக இரண்டும் இருந்தன. முதல்தளத்தில் வணிகவரி உதவி ஆணையர்-II அலுவலகத்திற்கு மேலே செல்லும் படிக்கட்டில் ஏறியவுடன் இடது பக்கம் தெற்குபார்த்த வாயில் உள்ள அலுவலகத்திற்கு உள்ளே நுழைந்தவுடன் தெற்கு பார்த்து ஒரு இருக்கையும், கிழக்கு பார்த்து ஒரு இருக்கையும், தெற்கு பார்த்த வாயிலுடன் கூடிய வணிக வரி அலுவலர்-IIன் அறையும் அமைந்திருந்தது. மேற்படி இரு அலுவலகங்களிலும் காலம் 5ல் கண்ட அலுவலர்கள் பணியில் இருந்தனர். தனிநபர் திரு.ஆனந்தமுருகன் (39/17) என்பவர் முதல் தளத்தில் இராஜபாளையம் வணிகவரி அலுவலர்-II திரு.முருகன் அவர்களின் அறையில் நின்று கொண்டிருந்தார். அதனைத் தொடர்ந்து அலுவலக பணியில் இருந்த வணிகவரி உதவி ஆணையர்-I திருமதி.ரோசிலின்சுந்தரி அவர்களிடம் விபரம் சொல்லி அவரது அறையையும், காலம் 5ல் கண்ட வரிசை எண்.2 முதல் 10 வரையிலான நபர்களையும், அவர்களின் இருக்கைகளையும் சோதனை செய்ய அங்கு சந்தேகத்திற்கிடமாக முகாந்திரமின்றி பணமோ, பொருளோ இல்லை. அதனைத் தொடர்ந்த பயிற்சி உதவி ஆணையர் இருக்கைக்கு அருகில் பதட்டத்துடன் நின்று கொண்டிருந்த காலம் 5ல் கண்ட வரிசை 11ல் கண்ட துப்புரவு பணியாளர் திரு.செந்தில்நாதன் என்பவரை சோதனை செய்தபோது, அவருக்கு அருகில் கத்தையாக கிடந்த பணத்தை காலம் 4ல் கண்ட வரிசை எண்.2 அரசு சாட்சி திரு.முனீஸ்வரனை எடுத்து எண்ணிப்பார்க்கச் சொல்ல அதில் 2 இரண்டாயிரம் ரூபாய் நோட்டுக்களும், 14 ஐநூறு ரூபாய் நோட்டுக்களும் சேர்த்து மொத்தம் ரூ.11,000/- இருந்தது. அந்த பணத்தைப்பற்றி மேற்படி திரு.செந்தில்நாதனிடம் கேட்டபோது, அவர் அந்த பணம் பற்றி தனக்கு எதுவும் தெரியாது என்றும், தனது பணமில்லை என்றும் கூறினார். ஆகையால் அந்த பணம் ரூ.11,000/- அரசு சாட்சிகள் முன்னிலையில் துணை ஆய்வுக்குழு அலுவலரால் கைப்பற்றப்பட்டது. அதனைத் தொடர்ந்து முதல் தளத்தில் அலுவலகப் பணியில் இருந்த வணிகவரி உதவி ஆணையர்-II திரு.ஜெயராஜ் அவர்களிடம் விபரம் சொல்லி அவரது அறையையும், காலம் 5ல் கண்ட வரிசை எண்.14 முதல் 17 வரையிலான நபர்களையும், அவர்களின் இருக்கைகளையும் சோதனை செய்ய அங்கு சந்தேகத்திற்கிடமாக முகாந்திரமின்றி பணமோ, பொருளோ இல்லை. அதனைத் தொடர்ந்து காலம் 5ல் கண்ட வரிசை எண்.13ல் உள்ள வணிக வரி அலுவலரான திரு.முருகன் என்பவரை சோதனை செய்தபோது அவரது பேண்ட் பாக்கெட்டில் கத்தையாக இருந்த பணத்தை அரசு சாட்சி-2 திரு.முனீஸ்வரன் எடுத்து எண்ணிப் பார்க்க அதில் ஒரு இரண்டாயிரம் நோட்டும், 7 ஐநூறு ரூபாய் நோட்டுக்களும் ஆக மொத்தம் ரூ.5,500/- இருந்தது. அவற்றைப் பற்றி மேற்படி வணிகவரி அலுவலரிடம் கேட்டபோது, அவர் அதற்கு சரியான

விளக்கம் கொடுக்கவில்லை. ஆகையால் அந்த பணம் ரூ.5,500/- துணை ஆய்வுக்குழு அலுவலரால் கைப்பற்றப்பட்டது. அதனைத் தொடர்ந்து மேற்படி வணிகவரி அலுவலர் திரு.முருகன் அவர்களின் இருக்கைக்கு எதிரில் பதட்டத்துடன் நின்று கொண்டிருந்த காலம் 5ல் கண்ட வரிசை 18ல் கண்ட தனிநபரான திரு.ஆனந்தமுருகன் என்பவரை சோதனை செய்தபோது, அவர் தனது சரக்குகளை வெளிமாநிலத்திற்கு அனுப்புவதற்குரிய சி-பார்ம் வேலையை முடித்துக் கொடுப்பதற்காக மேற்படி நபர் வணிகவரி அலுவலர் திரு.முருகன் அவர்களுக்கு கொடுக்க கொண்டுவந்திருப்பதாக தன்னிடமிருந்த பணம் ரூ.9,000/-ஐ தானாக எடுத்து ஆஜர் செய்தார். அந்த பணத்தை அரசு சாட்சி-3 திரு.மதியசேகரன் அவர்களை வாங்கி எண்ணி பார்க்கச் சொல்ல அதில் 18 ஐநூறு ரூபாய் நோட்டுக்கள் மொத்தம் ரூ.9,000/- இருந்தது. அதுபற்றி வணிகவரி அலுவலர் திரு.முருகன் அவர்களிடம் கேட்க, அவர் அதற்கு பதில் ஏதும் கூறாமல் அமைதியாக இருந்தார். எனவே அந்த பணம் ரூ.9000/-ஐ விசாரணைக்காக அரசு சாட்சிகள் முன்னிலையில் துணை ஆய்வுக் குழு அலுவலரால் கைப்பற்றப்பட்டது. பின்னர் மேற்படி வணிக வரி உதவி ஆணையர்-I மற்றும் உதவி ஆணையர்-II ஆகியோர்களிடமிருந்து அந்தந்த அலுவலகத்திற்குரிய வருகைப் பதிவேடு மற்றும் தாமத வருகைப் பதிவேடு ஆகியவை கைப்பற்றப்பட்டது. இந்த திடீர் சோதனை இணை ஆய்வு அறிக்கை மேற்படி அலுவல உதவி ஆணையர்-II அலுவலகத்தில் வைத்து மடிக்கணினியில் தட்டச்சு செய்து நகல் எடுக்கப்பட்டது. இந்த திடீர் சோதனை இணை ஆய்வு இன்று 29.12.2017ம் தேதி 18.30 மணிக்கு முடிக்கப்பட்டது. எனவே நேற்று (29.12.2017) எனது தலைமையில் விருதுநகர் மாவட்டம், இராஜபாளையம் வணிகவரித்துறை அலுவலக உதவி ஆணையர்-I மற்றும் உதவி ஆணையர்-II ஆகிய அலுவலகங்களில் திடீர் இணை ஆய்வு நடத்தி கைப்பற்றப்பட்ட லஞ்சப்பணம் என்று சந்தேகப்படத்தக்க வகையில் வணிக வரி அலுவலர் திரு.முருகன் என்பவர் வைத்திருந்த ரூ.5,500/-க்கும், மேலும் தனிநபர் திரு.ஆனந்தமுருகன் என்பவர் மேற்படி வணிக வரி அலுவலர் திரு.முருகன் அவர்களுக்கு கொடுப்பதற்காக கொண்டுவந்ததாக சொல்லப்பட்ட பணம் ரூ.9,000/-க்கும் தகுந்த முகாந்திரம் கூறாததால் 1) வணிக வரி அலுவலர் திரு.முருகன் என்பவர்மீதும், மேலும் 2)துப்புரவு பணியாளர் திரு.செந்தில்நாதன் என்பவர் அவருக்கு அருகில் சந்தேகப்படத்தக்க வகையில் கிடந்த பணம் ரூ.11,000/-க்கு அவர் சரியான முகாந்திரம் கூறமுடியாததால் அவர்மீதும் வழக்கு பதிவு செய்து நடவடிக்கை எடுக்க இந்த புகார் மனுவை என்னுடைய செயல்முறை நடவடிக்கையின் அறிக்கையை இத்துடன் இணைத்து இன்று 30.12.2017ம் தேதி மாலை 6.00 மணிக்கு தங்களிடம் புகார் மனுவை அளிக்கிறேன். ஒப்பம் (திரு.லட்சுமணன்), துணை ஆய்வுக்குழு அலுவலர், இராமநாதபுரம்.

Received the complaint and registred case in Virudhunagar V &AC Crime No.10/17 u/s 13(2) r/w 13(1) (d) prevention of corruption act 1988 on 30.12.2017 at 6.00 pm orginal first information report (Fir), complaint is submitted to honourable Chief judicial Magistrate cum special judge Srivilliputhur. Copies submitted to concerned Officers. (sd) R.Boominathan, 30.12.17 Inspr. of Police, (V & AC), Virudhdunagar.